60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த

முரசொலி செல்வம் - முன்னணியினர் மறைவுக்கு இரங்கல் - தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, டிச. 23- கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த முரசொலி செல்வம் மற்றும் முன்னணியினர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவை வருமாறு:-

● கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகக் கொள்கைகளை பரப்பிய வரும் - 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த எழுத்தாளரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு. முரசொலி செல்வம்.

தந்தை பெரியார் வழியில் பகுத்தறிவு - சுயமரியாதைக் கொள்கை உணர்வு மிக்கவராகவும், திராவிடக் கொள்கை உணர்வுகொண்ட தேசிய அரசியல்வாதியாகவும் திகழ்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும் - ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் திரு. கோ.சண்முகநாதன்

மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும் - உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும் - கழக சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கும்முடிப்பூண்டி கி.வேணு,

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரும் - சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கு.க.செல்வம்,

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளரும் - விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான நா.புகழேந்தி.

தலைமைக் கழக அலுவலக துணை மேலாளர் என். ஜெயக்குமார்,

கழக மூத்த முன்னோடியும் - இலக்கிய அணி மாநில இணைச் செயலாளருமான கயல்தினகரன்,

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத் தலைவரும் - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான த. வேணுகோபால்,

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைவர் வே. சுப்புராமன்,

கழக இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திரகுமாரி,

தொ.மு.ச. பேரவை இணைப் பொதுச் செயலாளர் மா. பேச்சிமுத்து,

மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் கழக மூத்த வழக்கறிஞர் அ.அ.ஜின்னா,

ஈரோடு வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோபி. வி.பி.சண்முகசுந்தரம்,

கழக சட்ட திட்டக் திருத்தக்குழு உறுப்பினர் - கோவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கோவை இரா. மோகன்,

சென்னை மாநகராட்சி முன்னாள் ஆளுங்கட்சித் தலைவர் சி.வி. மலையன்

தலைமைக் கழகப் பேச்சாளர் சீரணி சண்முகம்,

கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கழக மூத்த முன்னோடியும் - சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான திருப்பெரும்புதூர் ஏ.கோதண்டம்,

முன்னாள் அமைச்சரும் - கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவருமான க.சுந்தரம்,

பெரம்பலூர் மாவட்டம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் - மொழிபோர்த் தியாகியுமான எஸ். மணி,

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் - முன்னாள் நகர் மன்றத் தலைவருமான கோபால் (எ) மு. பழனிவேலன்,

தமிழ் உணர்வும் தளராத போர்க்குணமும் கொண்டவர் திராவிட இயக்கச் சிந்தனைவுடன் தீவிரமாகச் செயல்பட்டவர் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கழக மூத்த முன்னோடி மன்னப்பன்,

முன்னாள் சைதை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் து. புருஷோத்தமன்,

நாகை மாவட்டம், நாகை நகர முன்னாள் செயலாளர் போலீஸ் அ. பன்னீர்,

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.மருதுகணேஷ் அவர்களின் தாயார் திருமதி. பார்வதி நாராயணசாமி,

சென்னை தெற்கு மாவட்டம், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான ஆலப்பாக்கம் கு. சண்முகம்,

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், போளூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் - மாவட்ட அவைத் தலைவருமான வழக்கறிஞர் இராஜேந்திரன்,

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரக் கழக மூத்த முன்னோடி மிசாகுமரன்

சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் கே.எஸ். மணிமுத்து,

காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் செயலாளரும் - ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான கண்டோன்மெண்ட் சி. சண்முகம்,

புதுச்சேரி மாநில முன்னாள் முதலமைச்சரும் - மாநில முன்னாள் அமைப்பாளர் டி.இராமச்சந்திரன்,

சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான திருமதி ஷீபா வாசு,

புதுச்சேரி மாநில கழக மூத்த முன்னோடியும் - தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவருமான வழக்கறிஞர் ர. பலராமன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகக் கொள்கைகளை பரப்பியவர் முரசொலி செல்வம்!

கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகக் கொள்கைகளை பரப்பியவரும் - 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த எழுத்தாளரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு. முரசொலி செல்வம் - என்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துணை முதல்வர் பிறந்த நாள்: அரிமா ச.ரா.சீனிவாசன் தலைமை! மு.இராசா - கே.கண்ணன் - எஸ்.டி.தங்கராஜ் முன்னிலை!

கலைஞர் நகர் வடக்கு - 129 (அ) வட்டத்தில் 547 பேருக்கு நல உதவிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! மதிவதனி - முகம்மது ஜாபீர் சிறப்புரை!

சென்னை, டிச. 23 - கலைஞர் நகர் (விருகம்பாக்கம்) வடக்குப் பகுதி - 129 (அ) வட்ட தி.மு.க. சார்பில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 547 பேருக்கு நல உதவிகள் வழங்கும் விழாவும் பொதுக் கூட்டமும் நடைபெறுகிறது.

நாளை (23.12.2024 - திங்கள் கிழமை) மாலை 5.00 மணியளவில் சாலிகிராமம் -தசரதபுரத்தில் நடைபெறும் இவ்விழாவிற்கு மாவட்டப் பிரதிநிதி அரிமா ச.ரா.சீனிவாசன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் மு. இராசா, கே.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.தங்கராஜன், ஆர். பாபு, எஸ்.பாஸ்கரன், மு. கோவிந்தராசன், வீ.ஏ. ராஜா, எஸ்.மைக்கேல், சுப. முத்துவேல், சு.இளங்கோவன், சா.நா கராஜன், பி. விஜயலஷ்மி, துரை ரஞ்சித் குமார், ஆர்.டி.நல்லேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.விஜயகுமார், எஸ். ஆனந்தகுமார், பொன். கோவிந்தராஜன், எஸ்.அபுபக்கர், அ.ஸ்ரீதர், எஸ்.சண்முகம், க.அர்ச்சுனன், ச.முருகன், ஏ.எம்.ரவீந்திரநாத் ஜெயபால், இரா.பாஸ்கரன், ஏ. எல்.ஏ. மகேஷ், பி.கசாலி, முகேஷ், கே.எம்.சபாரத்தினம், சி.ரகு, கே.யசோதா, டி.பி.கோதண்டபாணி, எல்.தாராசிங், சுப.கணேசன், பி.கமல்ராஜ், கே.சாமுசகாபுதீன், கே.முத்துசாமி, ஏ.செந்தில், சி. ராஜேஷ் கண்ணா, ஏ.ஜெகதீஸ்வரன், இரா.சீனிவாசன், ஆர்.யுவராஜ், ராஜதுரை, எஸ்.சரவன், வி.முருகன், ஆர். சுரேஷ்பாபு, கே.ரவி, ஆர். கமல், வி.ஆர்பர்ட், எஸ்.புவியரசன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா. சுப்பிரமணியன், இவ்விழாவில் கலந்துகொண்டு, 547 பேருக்கு நல உதவிகள் வழங்குகிறார்.

திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி, தலைமைக் கழகப் பேச்சாளர்கள், ஒரத்தநாடு நடராஜன், ஜா.முஹம்மது ஜாபீர் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன்

கழக வர்த்தகர் அணிக் கவிஞர் காசி முத்து மாணிக்கம், தொகுதியின் தலைமையிடப் பார்வையாளர் வே.உமாகாந்த், மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணைச் செயலாளர் வே.கௌதமன், பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், வாசுகி பாண்டியன், பொன்.வரலோகு, எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன், மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், ஆர்.ஸ்டெல்லா, ஜாஸ்மின், ரத்னா, நிலவரசி துரைராஜ், ஆர். சசிக்குமார், கனிமொழி தனசேகரன், நிஷாசையத், த. அரங்கநாதன், மலர்மன்னன், சந்தோஷ் ஜெய, ஆர். இராமமூர்த்தி, சு.சம்பந்தம், க.உமாபதி, சொ.ஜெயக்குமார், வி.ச.சங்கரன், கே. பாலமுருகன், டி.எஸ்.பி.தென்னரசு, க.விஸ்வநாதன், அர.அ. எழில்வாணன், ஆர்.பழனிசாமி, இராஜ்.செழியன், பி. கே.குமார், அ.கதிரேசன், மு. அன்பழகன், சோ.செந்தில்குமார், கே.சதீஷ்கண்ணன், எஸ்.உமாபதி, அஜந்தா, எஸ். ரவி, பெ.தியாகு, அ.பாபு, பாரிநகர், கே.சசி. எம்.வீரா, அய்யாவு பழனி, த.முத்து மாரியப்பன், இரா.சங்கர், போஸ்.பழனியப்பன், சி.நந்தகோபால், பூ.ராஜா, க. இளங்கோ, ஏ.ஜெகதீசன், சோழா எஸ்.ரவி, எஸ்.கருப்பசாமி, கே.முருகன், ஈகை கருணாகரன், என்.ரவி, பா.தினேஷ்குமார் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

வழக்கறிஞர் சூர்யா சிவக்குமார், பொன்.துளசி, பா.ரத்தினகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பிரதிநிதி அரிமா ச.ரா.சீனிவாசன் ஏற்பாடு செய்துள்ளார்.

கல்லல் ஒன்றியத்தில் - பல்வேறு இடங்களில்

ரூ.59 லட்சத்தில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவங்கி வைத்தார்!

சிவகங்கை. டிச. 23- சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியத்திற்குட்பட்ட கண்டர மாணிக்கம் வளர்ச்சி குழுவின் சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சண்முகம் ராஜமாணிக்கம் சண்முகம் ராஜரத்தினம் ஆகியோர் வழங்கிய ரூபாய் 2 லட்சம் நன்கொடை உட்பட ரூபாய் 66 லட்சத்தில் கல்லல், தளகாவூர்,ஆற்காடு, வெளியாத்தூர், தட்டப்பட்டி ,என்.மேலையூர்,என். கீழையூர், ஆலங்குடி , இளங்குடி, கம்பனூர், கே.ஆத்தங்குடி, செம்பனூர் ,ஆ.கருங்குளம் வெளியாத்தூர் , தட்டப்பட்டி மேலப்பட்டமங்கலம், கீழப்பட்ட மங்கலம், கள்ளிப்பட்டு, தண்டரமாணிக்கம் , பளவான்குடி , எண் .வைரவன் பட்டி ,பாதரக்குடி, சவரக்கோட்டை ,ஆகிய 33 பள்ளிகளுக்கு ஸ்மார்ட் போர்டு வழங்கும் திட்டத்தினை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் துவங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து கல்லல் ஒன்றியம் சிராவயலில் ஆதிதிராவிடர் நல காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 9 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்க திறப்பு விழா, கம்பனூர் ஊராட்சி தென்கரையில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 14.59 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள புதிய உணவு தானியக்கிடங்கு, பாதரக்குடியில் ரூபாய் 25 . 99 லட்சத்தில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் மருங்கிப் பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 9லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்க திறப்பு விழா ஆக மொத்தம் 59 லட்சத்து 8000 மதிப்பிலான ஐந்து முடிவுற்ற திட்ட பணிகளை கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பொதுமக்களுக்கு ஒப்படைத்து சிறப்புரையாற்றினார்.

மேயர் திருமதி ஆர். பிரியா, திருவான்மியூர் கடற்கரையில் நேற்று (22.12.2024) நடைபெற்ற நீர்மிகு பசுமையான சென்னையின் மாபெரும் இசை வீதி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் வி. சிவகிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி கலைச்செல்வி செல்வம், திருமதி விஷாலாட்சி, மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியார் 51வது நினைவு நாள்! (24.12.2024)

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் காலை 9.30 மணிக்கு தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளான 24.12.2024 செவ்வாய் கிழமை அன்று காலை 9.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.



நாள் : 22-12-2024

நே.சிற்றரசு,
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

நே.சிற்றரசு - தயாநிதிமாறன் - அன்பகம் கலை - நா.எழிலன் பங்கேற்பு!

ஆயிரம் விளக்கு 117 அ வட்டத்தில் நல உதவிகள் வழங்கல்!

வட்டச் செயலாளர் தேனா எல்.தவமணி தலைமை! மா.பா.அன்புதுரை முன்னிலை!

சென்னை, டிச. 23 - சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 117 வது 'அ' வட்ட திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (23.12.2024 - திங்கள்) மாலை 6 மணிக்கு விஜயராகவா சாலை நக்கீரர் நகர் சந்திப்பில் வட்டச் செயலாளர் தேனா எல்.தவமணி தலைமையில் நடைபெறுகிறது.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா அன்புதுரை, கே.ஜே. சரவணன், பி.திருமலை, பி.ராபர், டி ஜே.எம்.எச்.இம்ரான் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். இக் கூட்டத்தில் தலைமை கழகப் பேச்சாளர்கள் கந்திலி கரிகாலன், எழும்பூர் கோபி ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இதில் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணைசெயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், நுங்கை வி.எஸ்.ராஜ், வெ. கௌதமன், டாக்டர் கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எம்.டி.மணிபாலன், ஜே. சிவலிங்கம், எஸ்.பத்மா, செல்வம், சி.வினோத்குமார், எஸ். சுந்தரேசன், ஜி.ரகு, எஸ். சுரேந்தர், ஆர்.ஷர்மிளா, எஸ் சதீஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஏ.சதாசிவம், எஸ் சரவணன், எம்.புருஷோத்தமன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக் கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கழக செயல் வீரர்கள் மகளிர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் தேனா எல்.தவமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு அவர்களின் தலைமையில், திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி முன்னிலையில், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99 வது வார்டுக்கு உட்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பங்கஜம் தெரு திட்டப்பகுதியில் சிதலம் அடைந்த 56குடியிருப்பு இடிக்கும் பணி தொடங்க இருப்பதால் கலந்தாய்வு கூட்டம் குடியிருப்பத்தார்கள் அனைவரும் கலந்து கொண்டனர். உடன் 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ராஜேஸ்வரி ஸ்ரீதர், 99அ வட்ட கழகச் செயலாளர் சி சேகர், மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.